மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 23/2021 நாள்– 31.03.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.A.C. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– ரெங்கராமானுஜம் (பி.வா.சா.3) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் கு.வி.

தாவா சொத்தின் சர்வே எண்.விஸ்தீர்னம் என்ன என்றால் சர்வே எண். மறந்துவிட்டது. விஸ்தீர்னம் 26 சென்ட் ஆகும். தாவா சொத்தை யாரால் யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் வேலுச்சாமி மற்றும் சுப்பையாவிடமிருந்து பாலசுப்பிரமணியம் கிரையம் வாங்கினார். பாலசுப்பிரமணியம் பெயரில் தான் தாவா சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியம் அவரது மனைவியின் நகையை விற்று தாவா இடத்தை கிரையம் பெற்றதாக நான் சொல்லியுள்ள நிலையில் பாலசுப்பிரமணியம் எவ்வளவு நகைகளை யாரிடம் விற்றார் என்றால் 4 பவுன் நகைகளை சாத்தூர் பஜாரில் உள்ள ஒரு கடையில் விற்றுள்ளார். அந்த கடையின் பெயர் தெரியாது. எவ்வளவுக்கு விற்றார் என்பது

தெரியாது. நகையை விற்க சென்றபோது நான் பாலசுப்பிரமணியனுடன் சென்றிருந்தேனா என்றால் இல்லை. நகை விற்றதாக பாலசுப்பிரமணியம் என்னிடம் சொன்னார். நான் சாத்தூருக்கு வந்திருந்தேன். ஆனால் கடைக்கு போகவில்லை. 26 சென்டில் எத்தனை சென்டில் வீடு கட்டடப்பட்டுள்ளது என்றால் 10 சென்டில் கட்டடப்பட்டுள்ளது. நீச்சல் குளம், தொழுவு, மற்றும் வீடு சேர்த்ததாகும். பாலசுப்பிரமணியனுக்கும் இந்த வீட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், அந்த வீட்டை வாதிதான் கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. பாலசுப்பிரமணியம் தான் கட்டினார். பிரதிவாதி ஒருநாளும் அந்த வீட்டை அனுபவித்தது கிடையாது என்றாலும் சரியல்ல. 2007 ம் வருடம் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே அவர்களது தாய் மாமா முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் பஞ்சாயத்து நடந்தது. ஆனால் அந்த பஞ்சாயத்தில் இல்லை. அந்த பஞ்சாயத்து எதற்காக பேசப்பட்டது என்றால் பாலசுப்பிரமணியனுக்கு சொத்துக்களை எல்லாம் கொடுப்பதாக பேசி முடிக்கப்பட்டதாக நான் கேள்விபட்டேன். வாதி சுப்புராஜ் 1979 ம் ஆண்டே சென்னை போய்விட்டார் என்றால் 1971 அல்லது 1972 ஆண்டு இருக்கலாம். வாதி தியாகராஜா மேல்நிலை பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றாலும் சரிதான். தாவா சொத்து வாதியின் சுயசம்பாத்தியத்தில் கட்டடப்பட்டது என்றால் சரியல்ல. பாலசுப்பிரமணியம் கட்டியது. பாலசுப்பிரமணியனுக்கும் தாவா சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் பாலசுப்பிரமணியனுக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.